# காமராஜரின் அரசியல் பயணமும் சமுதாய வாழ்க்கையும் பற்றி ஒரு ஆய்வு

# A Study of Kamaraj: Political Journey and Social Life

முனைவர்.தி.பாலசுப்பிரமணியன் / Dr.T.Balasubramanian[1]

## Abstract

Kamaraj, who was originally named Kamatchi, was born on 15 July 1903 in Virudhunagar, Tamil Nadu, to Kumaraswami Nadar, a merchant by profession, and Sivakami Ammal. He also had a younger sister named Nagammal. Kamaraj was first enrolled in a traditional school in 1907, and in 1908 he was admitted to Yenadhi Narayana Vidhya Salai. In 1909, he was admitted to Virudupatti High School. When Kamaraj lost his father at the age of six, his mother was forced to support the family. In 1914, Kamaraj dropped out of school to help his mother. As a young boy, he worked at his uncle's provision shop, which was the time when he began attending public meetings and processions about the Indian Home Rule Movement. Kamaraj developed an interest in prevailing political conditions by being an avid reader of newspapers. The Jallianwala Bagh massacre was the decisive turning point in his life - he decided to fight for national freedom and to bring an end to the foreign rule. In 1920, when he was 18, he became active in politics. He joined the Congress as a full-time political worker. In 1921, Kamaraj organised public meetings in Virudhunagar for Congress leaders. He was eager to meet Gandhi, and his fervent wish was fulfilled when Gandhi attended a public meeting on 21 September 1921 during his visit to Madurai. Kamaraj visited the villages to promulgate the Congress' propaganda. In 1922, the Congress boycotted the visit of the Prince of Wales as part of the Non-Cooperation Movement and Kamaraj travelled to Madras to participate in this event. Between 1923 and 1925, Kamaraj took part in the Nagpur Flag Satyagraha. In 1927, Kamaraj started the Sword Satyagraha in Madras and was chosen to lead the Neil Statue Satyagraha, but this was halted later in view of the Simon Commission boycott

Date of submission: 2021-04-25
Date of acceptance: 2021-05-27
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: Dr.T.Balasubramanian
Email: balasubramanian834@gmail.com

**Key Words:** Kamaraj in the freedom struggle, Kamaraj in the Quit India movement, Administration of Kamaraj, Kamaraj as Chief Minister

## முன்னுரை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இளமைப் பருவத்திலிருந்தே ஈடுபட்டு தன்னலம் கருதாமல் மக்களின் நல்வாழ்வுக்காகவே இறுதிவரை பாடுபட்டு வந்தவர் பெருந்தலைவர் காமராஜர் ஆவார். ஒரு சாதரணக் குடும்பத்தில் பிறந்தாலும், கல்வி அறிவு அதிகமாகப் பெற்றிருக்கவில்லை என்றாலும் தனது தேச பக்தியாலும், நேர்மை குன்றாத அரசியல் வாழ்க்கையாலும் இந்திய அரசியலில் புகழின் உச்சிக்குச் சென்றார் காமராஜர். இந்தியாவின் பெருமையை உலகிற்கு உணர்த்தினார். சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின் சீடராக விளங்கினார். ”நாட்டில் தோன்றிய நெருக்கடி காலங்களில் அமைதியான முறையில் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தார்.

[1] The author is a lecturer in the Department of History, Alagappa University, Karaikudi, Tamil Nadu, India. balasubramanian834@gmail.com

பிற்படுத்தப்பட்ட மக்களை தட்டி எழுப்பி அவர்களின் உரிமைகளை உணரச் செய்தார். நாடும் நலம் பெற வேண்டும், மக்கள் வாழ்வு வளம் பெற வெண்டும் என்பதையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் காமராஜர் ஆவார்” .

## இளமைக் காலம்

தமிழ்நாட்டிலுள்ள விருதுநகரில் 1903, ஜுலை 15ம் தேதி பிறந்தார் காமராஜர். இவரது தந்தை குமாரசாமி நாடார், தாய் சிவகாமி அம்மையார். தனது ஆறாம் வயதிலேயே தந்தையை இழந்தார் காமராஜர். தாயின் பொறுப்பில் வளர்ந்த இவர் ஆறாம் வகுப்போடு பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டார். பின்னர் தனது மாமாவின் துணிக்கடையில் வேலை பார்த்தார். இளம் வயதிலேயே தேசிய உணர்வுமிக்க காமராஜர் விருதுநரில் நடக்கும் காங்கிரஸ் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டார். தேசியத் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்ட இவரிடம் தேசிய உணர்வு தீவிரமாக வளர்ந்தது. ”1919ல் ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்து நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. விருதுநகரில் நடந்த கூட்டத்தில் டாக்டர் வரதராஜுலு நாயுடு நெஞ்சுருகப்பேசினார். இதைக் கேட்டதிலிருந்து காமராஜர் காங்கிரஸ் கட்சியின் தீவரத் தொண்டரானார்” (Crusading Congressman, 2008).

## சுதந்திரப் போராட்டத்தில் காமராஜர்

காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டதைக் கண்ட காமராஜரின் மாமா கருப்பையா நாடார் அவரை திருவனந்தபுரத்திலுள்ள தனது தம்பியிடம் அனுப்பினார். காமராஜர் திருவனந்தபுரத்திலிருந்த போது கேரளாவில் தீண்டாமை அதிகமாகக் காணப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் நிந்திக்கப்பட்டனர். வைக்கம் என்ற இடத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வழிபாட்டுக்கு கோவிலுக்குள் செல்லத் தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து நடைபெற்றப் போராட்டத்தில் காமராஜர் கலந்து கொண்டு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார். பின்பு ”சுசீந்திரத்தில் நடைபெற்ற ஆலய நுழைவுப் போராட்டத்தில் பங்கேற்றார். அதன்பிறகு விருதுநகர் திரும்பிய காமராஜர் நகர மக்களிடம் கட்சியைப் பரப்ப பாடுபட்டார். வீதி வீதியாகச் சென்று காசு திரட்டி, பல தலைவர்களை அழைத்து பொதுக்கூட்டங்கள் நடத்தினார்”.

## தீவிரவாத தேசியத் தலைவர் காமராஜ்

காங்கிரசில் தீவிரவாதிகள், மிதவாதிகள் என்ற பிரிவினை ஏற்பட்ட போது சென்னை மாநில தீவிரவாத காங்கிரஸ் தலைவரானார் சத்தியமூர்த்தி. காமராஜர் சத்தியமூர்த்தியின் சீடரானார். சத்திய மூர்த்தியைப் பின்பற்றியே தேசத் தொண்டில் ஈடுபட்டார். காமராஜரின் போராட்ட சகாப்தம் துவங்கியது.

1920ல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். 1923ல் தமிழ் நாட்டில் நடந்த மறியல் போராட்டத்தில் காமராஜர் கலந்து கொண்டார். நாகபுரியில் கொடிப் போராட்டம் நடந்த போது தமிழ் நாட்டிலிருந்து காமராஜர் தொண்டர்களை அனுப்பினார். தானும் நேரடியாகச் சென்றார். காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். அதன் ஒரு பகுதியாக 1930, மார்ச் மாதம் நாடெங்கும் உப்புச் சத்தியாகிரகம் தொடங்கியது. தமிழ் நாட்டில் காமராஜர் உப்பு சத்தியாகிரகத்தை நடத்தி சிறை சென்றார். இரண்டாண்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதுவே காமராஜர் சிறை சென்றது முதல் தடவையாகும். 1932ல் மீண்டும் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கியபோது காமராஜர் கைது செய்யப்பட்டு ஓராண்டு வேலூர் சிறையில் அடைக்கபட்டார். அப்போது 1931, ஜுலையில் காமராசரின் பாட்டி பார்வதியம்மாளின் உடல்நிலை மோசமாகி உயிர் பிரியும் தருவாயில் இருந்தார். அதனை அறிந்த அரசு அவரை பரோலில் விடுவிக்க முன்வந்தது. ஆனால் காமராஜ் பரோலில் வரமறுத்து சிறையில் இருந்தார். ”காந்திஇர்வின் ஒப்பந்தப்படி சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்ட போது காமராசரும் விடுதலையாகி வந்து தமது பாட்டியைச் சந்தித்தார்”. (The Hindu 2008).

## மதுரையில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்

1928ல் சர் ஜான் சைமனின் தலைமையில்

ஒரு கமிஷன் இந்தியா வந்தது. எல்லா கட்சிகளும் அதனைப் புறக்கணித்தன. கமிஷன் சென்ற இடமெல்லாம் 'சைமனே திரும்பிப் போ' என்று கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆனால் அரசு பயங்கரமான அடக்கு முறையைக் கையாண்டது. இப்போராட்டத்தில் தான் நேரு தாக்கப்பட்டார். லாலா லஜபதிராய் குதிரைப்படை வீரர்களால் தாக்கப்பட்டு, சில நாட்களில் மறைந்தார். சைமன் கமிஷன் மதுரை வந்தது. அக்கமிஷனை காமராஜ் தலைமையில் எதிர்க்க காங்கிரஸ் முடிவு செய்தது. தேசபக்தர்கள் கொதித்தெழுந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கையில் கருப்புக் கொடியுடன் 'சைமனே திரும்பிப் போ' என்று கோஷமிட்டு திருமலை நாயக்கர் திருமலை நாயக்கர் மகாலை நோக்கிச் சென்றனர். "காமராஜரும், ஜார்ஜ் ஜோசப்பும் கையில் மூவர்ணக் கொடியேந்தி மகால் நோக்கி வீரநடை போட்டனர். அவர்கள் பின் மக்கள் அணிவகுத்து நின்று கோஷமிட்டனர். போராட்டம் வெற்றியடைந்தது" (Wayback Machine, 2011).

### மீண்டும் சிறைவாசம்

காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் கீழ் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக காந்தி இலண்டன் சென்றார். அந்த மாநாட்டில் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்று காந்தியடிகள் அறிவித்தார். காந்தியடிகள் தாயகம் திரும்பும் முன்னரே காங்கிரஸ் தலைவர்களை ஆங்கில அரசு வேட்டையாடியது. தமிழகத்தில் தீவிரத் தொண்டராக விளங்கிய காமராஜ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். "அங்கு மாவீரர் பகத்சிங்கின் தோழர்களான ஜெயதேவ்கழுரும், கமல்நாத் திவாரியும் சிறை வைக்கப்பட்டிருந்தனர். காமராஜ் சிறையில் அவர்களைச் சந்தித்துப் பேசினார்".

இதையே காரணமாகக் கொண்டு வெள்ளை அரசாங்கம் காமராஜ் மீது 1923 ல் அப்போது வங்காள கவர்னராக இருந்த சர்ஜான் ஆன்டர்சன் என்பவர் ஊட்டிக்கு ஓய்வெடுக்க வந்தபோது அவரைக் கொலை செய்வதற்காக அருணாச்சலம் என்பருக்கு இரண்டு துப்பாக்கிகள் வாங்கிக் கொடுத்தார் என்று கொலை வழக்கு ஒன்று போட்டது. இது சென்னை சதி வழக்கு என்றழைக்கப்பட்டது. இது போலீசாரால் போடப்பட்ட பொய் வழக்கு என்று ஆந்திர கேசரி டி.பிரகாசம் அவர்கள் சிறையில் நிரூபித்தார்.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற காமராஜ் விருதுநகர் திரும்பினார். பொதுமக்கள் வெள்ளமென திரண்டு வந்து காமராஜரை ரயில் நிலையத்தில் வரவேற்றனர். அப்போது கூட்டத்தில் காமராஜர் பேசியது வரலாற்று சிறப்புமிக்கதாகும். நகர் அஞ்சல் நிலையத்தின் மீதும், ஸ்ரீவில்லிபுத்தூர் காவல்நிலையத்தின் மீதும் தனது நண்பர்களான முத்துச்சாமி, மாரியப்பன் என்பவர்களுடன் சேர்ந்து குண்டு வீசியதாக காமராஜ் மீது மற்றொரு வழக்கு போடப்பட்டது. இந்த குண்டு வீச்சுக்கும் காமராஜருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் பொய் வழக்குப் போட்டு அவரைக் கைது செய்து சிறையிலடைத்தனர். அப்போது தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்து காந்தியடிகள் டி.எஸ். எஸ். ராஜனிடம் இந்த வழக்கைத் தீவிரமாக நடத்தும்படி கூறினார். "இந்த வழக்கை பிரபல பத்திரிக்கையாளரும் வழக்கறிஞருமான ஜோசப் வாதாடி காமராஜரையும் அவரது நண்பர் முத்துச்சாமியையும் விடுதலை பெறச் செய்தார்"(Padma Awards Directory, 2010)

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக காமராஜ்

1936ம் ஆண்டு பண்டித நேரு தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவரோடு சத்தியமூர்த்தி, காமராஜ ஆகியோர் சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டனர். நேருவின் உறுதுணையாக அந்தப் பயணம் முழுவதும் இருந்தார் காமராஜ். 1937ல் சட்டசபைக்கு பொது தேர்தல் நடைபெற்றது. காமராஜ் விருதுநகர் தொகுதியில் காங்கிரசின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். "வெற்றி விழா ஊர்வலத்தில் காமராஜ் மீது அக்கினி திராவகம் வீசப்பட்டது. ஆனால் அது குறி தவறி குதிரை மீது விழுந்ததால் காமராஜ் தப்பித்தார்".

*1940ல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் காமராஜரின் பெயரை சத்தியமூர்த்தி முன் மொழிந்தார். ஆனால் இராஜாஜி சி.பி.சுப்பையா என்பவரை நிறுத்தினார். இருவருக்கும் நடைபெற்ற போட்டியில் காமராஜ் வெற்றி பெற்று தமிழ்நாடு காங்கிரசின் தலைவரானார். தனது சீடர் தலைவரானதைக் கண்டு அகம் மகிழ்ந்த சத்தியமூர்த்தி தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக காமராஜருக்கு உதவி புரிந்தார். ”1919ல் காங்கிரசின் சாதாரண தொண்டராக சேர்ந்த காமராஜ் 21 ஆண்டுகள் உழைப்பாலும் தியாகத்தாலும் தொண்டர்கள் உள்ளம் கவர்ந்த தலைவரானார்”.* (Kapur, Raghu Pati, 2014)

## ஒரு நாள் நகர்மன்றத் தலைவர்

*1939ல் வெள்ளை அரசாங்கம் இந்தியக் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் இந்தியாவைப் போரில் புகுத்தியத்தை கண்டித்து மகாத்மா காந்தி தனிநபர் சத்தியாகிரகத்தை எப்படி நடத்தலாம் என்று காந்தியடிகளைக் கலந்து ஆலோசிக்க வார்தா நோக்கிப் புறப்பட்டார் காமராஜ். அவர் சென்ற இரயில் கூடுர் புகைவண்டி நிலையத்தை அடைந்தது. போலிஸ் காமராஜரை இரயிலிலேயே கைது செய்து ஒராண்டு சிறைத் தண்டனை விதித்தது. காமராஜ் சிறையிலிருந்த போது விருதுநகரில் நகராட்சித் தேர்தல் நடைபெற்றது. சிறையிலிருந்தபடி காமராஜ் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1942, மார்ச் முதல் வாரம் காமராஜ் விடுதலை செய்யப்பட்டார். விடுதலை பெற்ற பின் விருதுநகர் வந்து மார்ச் 16ம் தேதி நகர் மன்றத் தலைவர் நாற்காலியில் அமர்ந்தார். நகர் மன்ற கூட்டத்தில் 91வது தீர்மானம் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டவுடன், காமராஜ் எழுந்து நின்று ‘என்னைத் தலைவராகத் தேர்வு செய்ததற்கு நன்றி. எனக்கு தேசப்பணிகள் நிறைய உள்ளன. எனவே நகர் மன்றப் பணியை திறமையாகப் செய்ய முடியாது. எனவே எனது தலைவர் பதவியை ராஜினாமா செய்கிறேன்’ என்று கூறி பதவி விலகினார்”* (Venkatesan & Sivakumar, 2014).

## வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் காமராஜ்

*இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்து அதற்கு எந்த வகையிலும் ஆங்கில அரசுக்கு உதவக்கூடாது என்று காந்தியடிகள் அறிவித்தார். காமராஜ் வீடு வீடாகச் சென்று செல்வந்தர்களிடமும், பொது மக்களிடமும் யுத்த நிதி தரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். போர்நிதி வசூலுக்குத் தடையாக இருந்தார் என்று காமராஜரைக் கைது செய்து சிறையில் அடைத்தது அரசு.*

*1942 ஏப்ரலில் கிரிப்ஸ் தெரிவித்த யோசனைகளை நிராகரித்த காங்கிரஸ் காரியக் கமிட்டி, 1942 ஆகஸ்ட் 8ல் பம்பாயில் கூடி ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தை அறிவித்தது. இது இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உச்சகட்டமாகும். ‘செய் அல்லது செத்துமடி’ என்று காந்தி குரல் கொடுத்தார். காந்தியடிகள் மற்றும் முக்கியத் தலைவர்களைக் கைது செய்தது அரசு. பம்பாயிலிருந்து சஞ்சீவிரெட்டியுடன் பயணம் செய்த காமராஜ் தாமும் கைது செய்யப்படுவோம் என்று யூகித்தார். எனவே தனியாகப் பிரிந்து பயணம் செய்தார். ”ராணிப்பேட்டைக்கு வந்து அங்கிருந்து கல்யாண சுந்தரம் ஐயர் என்பவரை அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருச்சி, மதுரை என்று பல ஊர்களுக்கும் போலீசார் கண்ணில் படாமல் சென்றார். அங்கு போராட்டப் பொறுப்புகளை உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு விருதுநகர் வந்தார்”11 1942, ஆகஸ்ட் 16ம் தேதி காலை காமராஜ் போலீசுக்குத் தகவல் கொடுத்து தான் இருப்பதைத் தெரிவித்தார். போலீசார் வந்து கைது செய்தனர். முதலில் வேலூர் சிறையிலும், பின்னர் ஆந்திராவிலுள்ள அமராவதி சிறையிலும் அடைக்கப்பட்டார். இவ்வாறு தலைவர் காமராஜ் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு ஆறுமுறை கைதாகி ஒன்பது ஆண்டுகள் சிறையில் வாழ்ந்தார். ”காமராஜரின் நெஞ்சுணர்வும், தியாக உணர்வும், தேசப் பற்றும் வருங்கால தலைமுறையினருக்கு வழி காட்டுவதாகும்”.* (K.Kamaraj <http://www.virudhunagar.nic.in/

kamaraj.htm>. virudhunagar)

### முதலமைச்சராக காமராஜ்

*1952ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஏப்ரல் 10ம் தேதி இராஜாஜியின் தலைமையில் தமிழகத்தில் அமைச்சரவை அமைக்கப்பட்டது.இவர் தனது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்திய குலக் கல்வித் திட்டத்திற்கு தமிழ்நாட்டில் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. இத்திட்டத்தை காமராஜ் ஆதரிக்கவில்லை அதனைக் கைவிடக் கேட்டுக் கொண்டார். "கட்சியிலிருந்த இராஜாஜி எதிர்ப்பளர்கள் இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி அவரை பதவி நீக்கத் திட்டமிட்டனர். கட்சிக்குள் தனது ஆதரவு சரிவதை உணர்ந்த இராஜாஜி பதவி விலகுவதாக அறிவித்தார்".*

*இராஜாஜி பதவி விலகிய பின்னர் தனக்குப் பிறகு சி.சுப்பிரமணியத்தை முதலமைச்சராக்க விரும்பினார். ஆனால் கட்சியினரின் பெரும்பான்மை ஆதரவு காமராஜருக்கு இருந்தது. 1954, மார்ச்சு 31ல் நடந்த காங்கிரஸ் சட்டமன்ற தேர்தலில் காமராஜருக்கு 93 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுப்பிரமணியத்திகு 41 வாக்குகளும் கிடைத்தன. 1954, ஏப்ரல் 8ம் தேதி இராஜாஜி பதவி விலகினார். 1954, ஏப்ரல் 13ம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் காமராஜ் முதல்வராகப் பொறுப்பேற்றார். ஆளுநர் பிரகாசம் காமராஜருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மொழிவழி பிரிந்த தமிழ் மாநிலத்தின் முதலாவது முதலமைச்சர் காமராஜர் ஆவார்* (Kandaswamy, P. (2001)

### காமராஜரின் அமைச்சரவை

*படிப்பறிவில்லாத காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றதும் மிகப் பெரிய சவால்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எட்டு பேர்களைக் கொண்ட ஒரு சிறிய அமைச்சரவையை அமைத்தார் காமராஜர். அப்படி அமைக்கும் போது காழ்ப்புணர்ச்சி இல்லாமலும், பரந்த மனப்பாண்மையுடனும் செயல்பட்டார். இராமசாமி படையாச்சி, ஹரிஜனத் தலைவர் பி.பரமேஸ்வரன், எம்.பக்தவத்சலம், சி.சுப்பிரமணியம், ஏ.பி.ரெட்டி, எம்.ஏ.மாணிக்கவேலர், ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி ஆகியோர் காமராஜ் அமைச்சரவையில் பங்கு பெற்றனர். சட்டமன்றக் கட்சித் தலைவராகவும், "சட்ட மேலவைக் கட்சித் தலைவராகவும் எம்.பக்தவத்சலம் பொறுப்பேற்றார்"*

*துறைகளைப் பிரித்தளிப்பதில்கூட திறமையுடன் செயல்பட்டார் காமராஜர். பொது நிர்வாகம், காவல் துறை ஆகியவற்றை மட்டும் தான் வைத்துக் கொண்டு, முக்கியத் துறைகளான விவசாயம், சமூக நலத்திட்டங்கள், தொழிற்துறை போன்றவற்றை சி.சுப்பிரமணியத்துக்கு ஒதுக்கினார் காமராஜர். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சுப்பிரமணியத்துக்கும் முக்கிய துறைகளை ஒதுக்கியது காமராஜரின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த பி.பரமேஸ்வரனுக்கு இந்து அறநிலையத்துறையை ஒதுக்கியது காமராஜரின் மிகப் பெரிய துணிச்சலான நடவடிக்கையாகும். கோவில்களில் எல்லோரும் சமம் என்பதைக் காட்டவே காமராஜ் இவ்வாறு ஒரு ஹரிஜனத் தலைவரை நியமித்தார். காமராஜ் முதல்வராகப் பதவியேற்கும் போது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். எனவே 1954 ஆகஸ்டு மாதம் குடியாத்தம் இடைத் தேர்தலில் நின்று வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார். இந்தத் தேர்தலில் பெரியாரும். அன்னாவும் காமராஜருக்கு ஆதரவளித்தனர். கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே எதிர்த்துப் போட்டியிட்டது (ஙிலீணீ□ஸீணீரீணீக்ஷீ, 2009).*

*1957ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும், 1962ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் வென்று அமைச்சரவை அமைத்தார் காமராஜ் தனது அமைச்சரவை மீது முழு நம்பிக்கை வைத்தார் காமராஜ். அவர்களது நிர்வாகத்தில் தலையிடவில்லை. அதே சமயம் தனது அமைச்சரவை எத்திசையில் செல்கிறது என்பதைக் கூர்ந்து கவனித்து வந்தார். எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் நன்கு ஆராய்ந்த பின்னரே தீர்மனங்கள் செய்வதை காமராஜ்*

தனது அணுகுமுறையாகக் கொண்டிருந்தார். நல்ல திறமையான ஆட்சியாளர் என்ற பெயர் எடுப்பதில் இந்தப் போக்கு அவருக்கு உதவியது. ஒரு சுத்தமான நிர்வாகத்தை வழங்கக்கூடிய மனவலிமை காமராஜருக்கு இருந்தது ("K Kamaraj, 2019).

## தமிழக எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தல்

இந்திய சுதந்திரம் அடைந்த பிறகு மொழிவாரி மாநிலக் கோரிக்கைகள் ஆங்காங்கே எழுந்தன. ஆந்திர மாநிலம் தனியாப் பிரிந்தது. சிவஞானம் போன்றவர்கள் சென்னை நகரத்துக்காகவும், தமிழ் மாநிலத்திற்காகவும் 1953, 1956ம் ஆண்டுகளில் இயக்கம் நடத்தினார்கள். தமிழ் நாட்டின் முதலமைச்சராக காமராஜர் பதவியேற்ற பிறகு எல்லைப் பிரச்சனை விசுவரூபம் எடுத்தது. தமிழ் நாட்டுக்கும் ஆந்திரத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் கேராளவுக்கும் எல்லைப் பிரச்சனைகள் தோன்றின. இதனைத் தீர்க்க எலலைக் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. ”கேரளத்தில் இருந்த நாஞ்சில் நாட்டுப் பகுதிகள் தமிழ்கத்துடன் சேர்ந்தன. மதுரை மாவட்டத்தை ஒட்டிய தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் கேரளத்துடன் சேர்ந்தன.

இந்தத் தமிழக எல்லைப் பிரச்சனையில் காமராஜ் முதல்வர் என்ற முறையில் நடுநிலை, மவுனம் என்ற யுக்திகளைக் கையாண்டார். அப்போதைய கேரள முதல்வர் பனம்பள்ளி கோவிந்த மேனனுடன் பேச்சுவார்த்தை நடத்தி பரம்பிக்குளம் ஆழியாறு அணை ஒப்பந்தம் கோவையில் செய்து கொண்டார் காமராஜ் ஆந்திர முதல்வர் சஞ்சீவ ரெட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கு எல்லையில் திருத்தணி போன்ற பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டன. இப்படி பக்கத்து மாநிலங்களுடன் நல்லுறவு கொண்டு தனது தலைமைத் தகுதியாலும் தொலைநோக்காலும் தமிழ்நாட்டுக்கு நிலையான லாபங்களைப் பெற்றுத் தந்தது காமராஜ் ஆட்சியின் மகத்தான சாதனையாகும்.காமராஜ் என்ற கம்பீரமான தலைமை நிகழ்த்திய அற்புதங்கள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும் (Stepan, Alfred, Linz, Juan, 2011).

## கல்விக்கு கண் தந்த காமராஜர்

சுதந்திரம் எப்படி நாட்டு மக்களின் பிறப்புரிமையோ அதே போல கல்வி பெறுவதும் நாட்டு மக்களின் பிறப்புரிமையாகும் என்பதை உணர்ந்தவர் காமராஜர். ‘எல்லா அறங்களிலும் புண்ணியங்கோடி தருவது ஒரு ஏழைக்கு எழுத்து அறிவித்தல்’ என்ற பாரதியாரின் வரிகளுக்கு செயல்வடிவம் கொடுத்தவர் காமராஜர். ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து, வறுமையில் சிக்கி ஆறாவது வகுப்பு வரை மட்டும் கல்வி பயின்று, தொண்டராக காங்கிரசில் நுழைந்து, தலைவராகி, முதல்வராகப் பொறுப்பேற்ற காமராஜர் எல்லோருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்பதை தனது ஆட்சியின் மிகப் பெரிய லட்சியமாகக் கருதிச் செயல்பட்டார்.

முதல்வராகப் பொறுப்பேற்றவடன் இராஜாஜி ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட ஆறாயிரம் ஆரம்பப் பள்ளிகளைத் திறக்க ஆணையிட்டார். மாணவர்கள் பாதி நாள் படிப்பும், மீதிநாள் குலத் தொழில் செய்ய வகை செய்யும் இராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தை ஒழித்தார். பள்ளிகள் இல்லாத கிராமம் என்ற நிலை மாறி தமிழ்நாட்டில் முன்னூறுக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட எல்லா கிராமங்களிலும் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1954ல் 18 லட்சம் சிறுவர்கள் மட்டும் படித்த நிலை மாறி 1961ல் 34 லட்சம் சிறுவர்கள் படிக்கும் நிலை ஏற்பட்டது (A Review of the Madras Legislative Assembly, 2011).

கல்வி வளர்ச்சிக்காக புரட்சிகரமான புதிய திட்டம் ஒன்று காமராஜரால் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி பள்ளி வசதிகளைப் பெருக்கம் பணியில் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பினைப் பெறுவதற்காக பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நாடு முழுவதும் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த மாநாடுகள் மூலமாக பள்ளிகளில் வசதிகளைப் பெருக்கும் முயற்சிக்கு தமிழகமெங்கும் நல்ல வரவேற்பு இருந்தது. முதல் பள்ளி சீரமைப்பு

மாநாடு 1958 பிப்ரவி 20ல் கடம்பத்தூரில் நடைபெற்றது இத்தகைய மாநாடுகளில் காமராஜர், கல்வி அமைச்சராக இருந்த சுப்பிரமணியம், பொதுக் கல்வி இயக்குநராக இருந்த நெ.து.சுந்தர வடிவேலு ஆகியோர் கலந்து கொண்டு ஊக்கம் அளித்தனர். ”1958 முதல் 1963 வரை 150 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் பொது மக்கள் மனமுவந்து அளித்த உதவிகளால் சிறுவர், சிறுமியர்களுக்கு இலவச உடை, உணவு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன”. எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பதே காமராஜரின் லட்சியம். எனவே 1955, 1956ம் ஆண்டு முதல் எல்லா ஏழைச் சிறுவர் சிறுமியர்களுக்கும் இலவசக் கல்வியளிக்க உத்தரவிட்டார்.

1960 ம் ஆண்டில் 11ம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி அளிக்கபட்டது. உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 471 விருந்து 1961ல் 1361 ஆக உயர்ந்தது. மேலும் மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள், திக எண்ணிக்கையில் தொடங்கப்பட்டன. இந்தியாவிலேயே முதல் முதலாக தமிழ்நாட்டில் தான் பொது நூலச் சட்டம் இயற்றப்பட்டது. 1953ல் ஒரே கிளை நூலகம் மட்டும் இருந்தது. அது 1961ல் 454 ஆக உயர்ந்தது. ”1947, 1948 ல் சென்னை மாகாண அரசு கல்விக்காக 704 லட்சம் ரூபாய் செலவு செய்தது. ஆனால் அது 1963 ல் 134 கோடி ரூபாயாக உயர்ந்தது. அதாவது மாநிலத்தின் மொத்த வருமானத்தில் 4ல் 1 பாகம் கல்விக்காகச் செலவிடப்பட்டது (The Madras Legislative Assembly, Third Assembly II Session.2011).

இவ்வாறு காமராஜர் ஆட்சிக் காலத்தில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டு மக்களிடையே எதிர்காலத்தின் மீது மிகப் பெரிய நம்பிக்கை ஒளி வீசியது.

## காமராஜர் அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டம்

வறுமையில் உழன்று சிக்கித் தவிக்கும் நாட்டு மக்களின் நாடித் துடிப்பை நன்கறிந்தவர் காமராஜர். எனவே பள்ளிகளுக்கு வரும் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை 1955, மார்ச் 27ல் சென்னை பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில் நடந்த தொடக்கப்பள்ளி ஆசியர்கள் மாநாட்டில் அறிவித்தார் காமராஜர் ‘வயிற்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்’ என்று பாடிய பாரதி பிறந்த எட்டயபுத்தில் மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் காமராஜர். மூவாயிரம் ஊர்களில் இத்திட்டம் தொடங்கப்படடது. 1957, 1958ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில மதிய உணவுத்திட்டம் இடம் பெற்றது. அதற்காக நிதி ஒதுக்கப்பட்டது.

”1957 நவம்பர் 1ம் தேதி முதல் காமராஜரின் மதிய உணவுத்திட்டம் அரசின் ஒப்புதல் பெற்ற அரசு நிதி உதவி பெரும் திட்டமாக மாறியது”27இந்த பதிய திட்டத்தின்படி முதல் கட்டமாக 4200 மையங்களில் 1,20,000 மாணவர்களுக்கு பகல் உணவு அளிக்கபட்டது. இதன் மூலம் கிரமப்புறங்களில் அனைத்து சாதியைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் சமமாக அமர்ந்து உணவு அருந்தக்கூடிய சமத்துவ சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இடையிலேயே பள்ளிப் படிப்பை விட்டுவிடும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. காமராஜரின் இந்த மதிய உணவுத்திட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டமாகும் (Khan, Farhat Basir, 16 September 2019).

## காமராஜரின் ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ச்சி

காமராஜர் ஆட்சி கல்வியில் புரட்சி செய்து சாதனை படைத்ததைப் போல தொழிற் துறையிலும் புரட்சி செய்து வரலாறு படைத்து. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல காமராஜர் ஆட்சியில் எண்ணற்ற முயற்சியில் செயல்வடிவம் பெற்றன. காமராஜர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதும் பல தொழில்சாலைகள் தொடங்கப்பட்டன. இதனால் வேலை வாய்ப்புகள் அதிகரித்தன.

## மத்திய அரசுத்துறை

காமராஜர் ஆட்சிக் காலத்தில்

துவக்கப்பட்ட மிகப் பெரிய மத்திய அரசின் திட்டம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி' திட்டமாகும். தென் ஆற்காடு மாவட்டத்தில் இருக்கும் சுமார் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரியை வெட்டிப் பயன்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தப் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக்குப் பயன்படுவதாகும். இந்தத் திட்டம் 86 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது. நெய்வேலியில் 2லு லட்சம் கிலோ வாட் உற்பத்தித் திறனுள்ள அனல் மின்சார நிலையம் ரஷ்ய நாட்டு உதவியுடன் தொடங்கப்பட்டது (Gopal, Madan, 1990).

சென்னை பெரம்பூரில் ரயில் பெட்டிப் தொழில்சாலை ஸ்விட்சர்லாந்து நாட்டு உதவியுடன் தொடங்கப்பட்டது. இதன் மூலம் ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் பல துணைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்பு அளித்தது. மத்திய அரசின் முதலீட்டில் சென்னை கிண்டிக்கு அருகில் ஆலிவெட்டி என்ற இத்தாலிய நிறுவன ஒத்துழைப்புடன் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை நிறுவப்பட்டது. பிரெஞ்சு தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் நீலகிரியில் கச்சா பிலிம் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. திருச்சிக்கு அருகில் திருவெறும்பூரில் கனரக கொதிகலன் தொழிற்சாலையும், "ஆவடியில் ராணுவத் தளவாட தொழிற்சாலையும் கிண்டிக்கு அருகில் நத்தப்பாக்கத்தில் அறுவவை சிகிச்சைக் கருவிகள் செய்யும் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டன (Pioneer, 1975).

## மாநில அரசுத் துறை தொழில்கள்

மாநில அரசின் முதலீட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்கான கிண்டியிலும், விருதுநகரிலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன. இதேபோல ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, நெல்லை, மார்த்தாண்டம் ஆகிய ஊர்களிலும் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டன. இந்தத் தொழிற்பேட்டைகளில் பெரிய தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் தேவைப்படும் உபகருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தச் சிறுதொழில் பிரிவுகள் மூலம் 500 சிறுதொழில் முனைவோர் பயனடைந்தனர்.

மேலும் தனியார் துறையில் பொறியியல் தொழில், துணி உற்பத்தி, சிமிண்ட் ஆகியவைகளின் உற்பத்தியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. காமராஜ் ஆட்சியின் போது தான் ராஜபாளையம் ராம்கோ சிமிண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. துணி உற்பத்தி ஆலைத் தொழிலினால் 1961ல் 1,20,000பேர் வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. காமராஜர் ஆட்ச்சிக் காலத்தில் வடபாதி மங்கலம், பேட்டை வாய்த்தலை ஆகிய இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டன. 1961 ல் மேலும் ஒன்பது சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி தரப்பட்டது. பொறியியல் தொழிலும் கணிசமான வளர்ச்சி பெற்றன. "வண்டலூரில் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை, திருவெற்றியூரில் ராயல் என்பீல்ட் மோட்டார் தொழிற்சாலை, எண்ணூர் அசோக் லேலேண்ட் ஆகியவை தொடங்க அரசு பல்வேறு உதவிகளைச் செய்தது". சேஷாயி நிறுவனத்தாரின் காகிதத் தொழிற்சாலையும் காமராஜ் ஆட்சிக் காலத்தில் தான் தொடங்கப்பட்டது. மேட்டுப்பாளையம் அருகில் விஸ்கோஸ் நிறுவனத்தின் செயற்கைப் பட்டு தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இவ்வாறு காமராஜ் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு தொழில் வளம் பெற்றது. தமிழ்நாட்டில் இந்தக் தொழிற்புரட்சி ஏற்பட காமராஜருக்குப் பெரிதும் துணை நின்ற தொழில் அமைச்சர் ஆர்.வெங்கட்ராமன் ஆவார் (Kumaraswami, 2020).

## காமராஜரின் நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் அணைகள்

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே மணிமுத்தாறு அணை கட்டப்பட்டது. இதனால் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேட்டூர் அணையில் ரூபாய் 2.5 கோடியில் பாசன கால்வாய்கள் அமைக்கப்பட்டன. இதனால் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. அமராவதி அணை 3 கோடி ரூபாய் செலவில்

கட்டப்பட்டது.இதனால் 47 ஆயிரம் ஏக்கர் நிலம் பயனடைகின்றன. 2.5 கோடி ரூபாய் செலவில் வைகை அணை கட்டப்பட்டது. இதனால் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. 2.5 கோடி ரூபாய் செலவில்சாத்தனூர் அணை கட்டப்பட்டது. இதனால் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிறது.

* வாலையாறு அணை 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது.இதனால் 6,500 ஏக்கர் நிலம்பயன் பெறுகிறது.
* மங்கலம் அணை 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது.இதனால் 6 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.
* ஆரணி அணை, 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதனால் 1,100 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுகிறது.
* காவிரி டெல்டா பகுதியில் 30 லட்சம் ரூபாய் செலவில் கால்வாய்கள் புதுப்பிக்கப்பட்டன.
* கிருஷ்ணகிரி அணை, 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதனால் 7,500 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுகின்றன.
* 10 கோடி ரூபாய் செலவில் கீழ்பவானித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் 2 லட்சம் ஏக்கர் நிலம் பயன் பெறுகின்றன.
* புள்ளம்பாடி திட்டம் 1.5 கோடிரூபாயில் உருவாக்கப்பட்டது. இதனால் 22 ஆயிரம் ஏக்கர்நிலங்கள் பயனடைகின்றன.
* கோமுகி ஆற்றுத்திட்டம், 75 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது. இதனால் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் பெற்றன.
* பேச்சிப்பாறை, அழியாறு, பரம்பிக்குளம் மற்றும் குந்தா ஆகிய அணைகள் காமராஜர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டன. தொழிற்சாலைகள்அவரது ஆட்சிக் காலத்தில் சென்னை கிண்டியிலுள்ள தொழிற்பேட்டைகள், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், எண்ணூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி துறைமுகம் ஆகியவை முக்கியமானவை.

சிமெண்ட் ஆலைகள், காகித உற்பத்தி ஆலைகள், அலுமினிய உற்பத்தி நிறுவனங்கள், மாக்னசைட்,சுண்ணாப்பு சுரங்கங்கள், ரப்பர் தொழிற்சாலைகள் ஆகியவற்றையும் காமராஜர் ஏற்படுத்தினார். நூல் நூற்பு, கார் உற்பத்தி, கார் உதிரிபாகம், சைக்கிள், என்ஜின், மோட்டார் வாகனம், தட்டச்சு பொறிகள், சுவிட்சு கியர்கள், எலக்ட்ரிக் கேபிள்கள், மருத்துவ அறுவை சிகிச்சை கருவிகள், தொடர்வண்டிப் பெட்டிகள், ராணுவவாகனங்கள் ஆகியவைதயாரிக்கும் தொழிற்சாலைகளையும் காமராஜர் நிறுவினார் (Devanesan.(2003).

1952 பொதுத்தேர்தலில் காமராஜர், ஸ்ரீவில்லிபுத்தூர் லோக்சபா தேர்தலில் நின்றபோது அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுள் விஞ்ஞானி என்ற புகழ்பெற்ற ஜி.டி.நாயுடு. அதே ஜி.டி.நாயுடு, காமராஜர் முதல்வரான பின், அவர் புரிந்த சாதனைகளை வியந்து, காமராஜர் தான் என்றென்றும் தமிழக முதல்வராக இருக்க வேண்டும்என்றார்.

காமராஜரையும், காங்கிரசையும் கடுமையாகத் தாக்கிய ஈ.வே.ரா., "பச்சைத் தமிழன்' என காமராஜரைப் பாராட்டினார். அவரது சாதனைகளை காங்கிரஸ்காரர்களைவிட அதிகம் போற்றினார். காமராஜர், ரஷ்யாவுக்கு செல்லும் போது அணிய கோட் தைத்திருந்தார். ஆனால் நான் கதர் சட்டை கதர் வேட்டியுடன் தான் சென்று வருவேன் எனக் கூறி சென்று வந்தார். "தியாக உணர்வுடன், தேசப்பணியில் ஈடுபட்ட காமராஜர், 1975 அக்.2ல், மறைந்தார். மறைந்த போது, இவரிடம் சிறிதளவு பணம் மட்டுமே இருந்தது. வங்கிக் கணக்கோ, சொத்தோ அவர் பெயரில் இல்லை. இறுதி வரை வாடகை வீட்டிலேயே வசித்தார். இவரது சேவைகளை பாராட்டி, மறைவுக்குபின்

*1976ல், நாட்டின் மிக உயரிய “பாரத ரத்னா’ விருது காமராஜருக்கு வழங்கப்பட்டது (றிவீறீறீணீவீ, 1979).*

*புனிதமான, எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த காமராஜருக்கு மக்கள், படிக்காத மேதை, ஏழைப்பங்காளன், கர்ம வீரர், தென்னாட்டு காந்தி, கிங் மேக்கர், பெருந்தலைவர் என்ற பட்டங்களை சூட்டி அவரை போற்றி வருகின்றனர்.”காமராஜர் ஆட்சியில் கல்விப் புரட்சி, தொழில் புரட்சியைப் போல் பாசனப் புரட்சியும் நடைபெற்றது. உணவுப் பற்றாக்குறையைப் ஆறுகளின் குறுக்கே நீண்ட, வலிமையான அணைகள் கட்டப்பட்டன.அணைக்கட்டுத் திட்டங்களில் மிகப் பெரியது கீழ்பாவனி திட்டமாகும். கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே பவானி ஆற்றின் குறுக்கே இந்த அணை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கோவை, திருச்சி மாவட்டங்களில் 2,50,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. மேலும் மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து ஐந்து மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட்டது.கீழ் பவானிக்கு அடுத்த பெரிய வட்டம் மணிமுத்தாறு ஆகும்* (Thangavelu, 2008).

*தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறாகிய மணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டது. இதன் மூலம் ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. மேலும் அமராவதி அணைக்கட்டும், வைகை அணைக்கட்டும் காமராஜ் ஆட்சிக் காலத்தில் என் அமைக்கப்பட்டன. பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்ட சாத்தனூர் அணைக்கட்டினால் தென் ஆற்காடு மாவட்டம் நீர்ப்பாசன வசதி பெற்றது* (Chandra, Bipan, 11 February 2008).

*சேலம் மாவட்டம் கிருஷ்ணகிரியில் ஒரு அணைக்கட்டும், செங்கற்பட்டு மாவட்டம் பிசாத்தூரில் ஆரணியாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டும் கட்டி முடிக்கப்பட்டது. காவிரியின் வலக்கரையில் புதிய கட்டனை உயர்மட்டக் கால்வாயும் காவிரியின் இடக்கரையில் புள்ளம்பாடி கால்வாயும் வெட்டப்பட்டன.”தென்ஆற்காடு மாவட்டம் வீடுரின் அருகே வராக நதியின் குறுக்கே ஒரு அணையும், அதன் இடப்பக்கத்தில் கால்வாயும் கட்டி முடிக்கப்பட்டன. பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் 1961 ம் நேருவினால் தொடங்கப்பட்டது” இவ்வாறு காமராஜர் ஆட்சியில் பாசனத்துக்குரிய பேராறுகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் வறண்ட நிலங்கள் வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்றப்பட்டன. பருவத்தில் மழை இல்லாமல் போய் விளைச்சல் குன்றிவிடுமோ என்ற அச்சம் நீக்கப்பட்டது. இத்திட்டங்கள் நீரைத் தேக்கி வைத்து பயனளித்துடன் ஆறுகளில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடாதாவாறும் பாதுகாக்கின்றன. இவ்வாறு காமராஜ் ஆட்சிக் காலத்தில் விவசாயம் செய்யப்படும் மொத்தம் 150 லட்சம் ஏக்கரில் 56 லட்சம் ஏக்கர் நிலங்கள் நிலையான நீர்ப்பாசன வசதி பெற்றன (*Chandra, Bipan, 2021).

**காமராஜரின் பஞ்சாயத்து சீர் திருத்தங்கள்**

*கிராமப்புற மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக பஞ்சாயத்து: முறை காமராஜர் ஆட்சிக் காலத்தில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டது. 1958ல் காமராஜர் காலத்தில் ‘தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம்’ இயற்றபட்டபட்டது. காந்தி ஜெயந்தி விழாவை பஞ்சாயத்து ஆட்சி ஆரம்பமாகும் நாளாகக் கொண்டாப்பட்டது. 1960 ம் வருட காந்தி ஜெயந்தி விழாவின் போது தமிழ் நாட்டில் 75 பஞ்சாயத்து யூனியன்களும், 1961ல் 129 யூனியன்களும் ஆரம்பமாயின. இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் காமராஜர் ஆட்சியில் 33 பஞ்சாயத்து யூனியன்களும் சுமார் 12,000 பஞ்சாயத்துக்களும் பணியாற்ற ஆரம்பித்தன.*

*இந்தப் புதிய பஞ்சாயத்து ஆட்சி தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றி செல்பட்டது. கிராம நல வேலைகளை பஞ்சாயத்துக்களே ஏற்று நடத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. விவசாயம், கல்வி, மருத்துவம், குடி தண்ணீர், சாலை வசதி, கைத்தொழில், மாதர் நலம், குழந்தைப் பராமரிப்பு முதலிய பல்வேறு பொறுப்புகளை கிராம பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களுமே மேற்கொண்டு சிறப்பாகச் செயல்பட்டன. இவ்வாறு கிராமப்புற வளர்ச்சியை தனது லட்சியமாகக் கொண்டு செயல்பட்டவர் காமராஜர் ஆவர்*

(George Joseph, 2016).

**காமராஜர் காலத்தில் தமிழ் வளர்ச்சி**

தமிழன்னையை முதன் முதலில் அரியாசனத்தில் ஏற்றி வைத்த பெருமை காமராஜருக்குத் தான் உண்டு. தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு காமராஜர் ஆட்சியில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1956, டிசம்பர் 18 ம்தேதி 1957, 1958ம் வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தை தமிழில் சமர்ப்பித்து சாதனை படைத்தர் சி.சுப்பிரமணியம். 1956 டிசம்பர் 27ல் தமிழ் ஆட்சி மொழி மசோதா சி.சுப்பிரமணியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1959 ஜனவரியில் தமிழ் அறிஞர்களை உறுப்பினர்களாக் கொண்ட ' தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்' அமைக்கப்பட்டது. இதற்கு கல்வியமைச்சரே தலைவர் ஆவார்.

கல்லூரிகளில் பாடங்களை கற்பிக்கும் மொழியாகத் தழிழைக் கொண்டு வரவும், தமிழில் மலிவான விலையில் உயர் கல்விக்கான பாட நூல்களை வெளியிடவும் இந்த மன்றம் செயல்பட்டது. 1959 ஜனவரி 26ல் தமிழ் நூல் வெளியீட்டுக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்கான திட்டம் வகுத்தது. முதன்முதலாக கோவை அரசினர் கல்லூரியில் 1960, 1961 ல் பி.ஏ வகுப்புக்கு மட்டும் தமிழை பயிற்று மொழியாக்குவது என்று தீர்மானித்தது. இத்திட்டம் பின்னர் 1963, 1964ல் அனைத்து கல்லூரிகளுக்கம் விரிவுப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

தமிழைப் பயிற்று மொழியகப் படிப்பவர்களுக்கு மாத ஊக்கத்தொகையும், அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டன. தரமான ஆங்கிலப் பாட நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்டடது. காமராஜர் ஆட்சியில் காலைச்சொல் அகராதி கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 1960ல் வேதியில் உளவியல், புள்ளியில் வானியல் போன்ற பல்வேறு பாடங்களுக்கான காலைச் சொல் அகராதி தயரிக்கப்பட்டு மலிவு விலையில் விற்கப்பட்டன.

மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்ட பின்பு மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்ற கோரிக்கை எழுந்தது. காமராஜர் ஆட்சி இதனைப் பரிவுடன் பரிசீலித்து 1961, பிப்ரவரி 24ல் ஒரு அறிக்கையை சட்டப் பேரவையில் சி.சுப்பிரமணியம் சமர்ப்பித்தர். மெட்ராஸ் ஸ்டேட் என்பதை தமிழில் எழுதும் போது இனி 'தமிழ் நாடு' என்று எழுத அரசு முடிவெடுத்தது. அரசாங்க நிர்வாகக் கடிதப் போக்குவர்த்தில் இனி தமிழ்நாடு என்று தான் எழுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. இதன்படி தமிழகமெங்கும் பெயர் பலகைளில் 'தமிழ்நாடு' என்றே பொறிக்கப்பட்டது 1962, டிசம்பரில் காமராஜரின் ஆட்சிக் காலத்தில் பாரதியாரின் 81வது பிறந்த நாள் சென்னை நகரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தமிழ் கவிஞர் ஒருவருக்கு அரசு அதிகாரப்பூர்வமாக விழா எடுத்து சாதனையை நிகழ்த்திக் காட்டியது காமராஜர் ஆட்சியாகும் (Balasubramanian, Venkatraman, 2020).

**முடிவுரை**

பெரியார் நற்சான்றிதழ் வழங்கிய காமாராஜரின் ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாக கருதப்படுகிறது. காமராஜ் ஆட்சி என்றால் எளிமை, வாய்மை, தூய்மை, நேர்மை, திறமை என்று பொருளாகும். ஏளிமையான ஆட்சியை ஊழல், பகட்டு, ஆரவாரம் இல்லாத, ஒளிவு மறைவற்ற வெளிப்படையான ஆட்சியை அமைத்தவர் காமராஜர் தான் ஆட்சி செய்த ஒன்பது ஆண்டுகளில் தமிழக நலனே அவர் முன் நின்றது. தமிழ் நாட்டின் ரட்சகர் என்றும் கல்வி வள்ளல் என்றும் பெரியாரால் போற்றப்பட்ட காமராஜர் 1975, அக்டோபர் 2 ல் இறந்த போது அவருக்கு சொந்தமாக இருந்தவை பத்து கதர் சட்டைகளும், வேஷ்டிகளும், ஒரு நூறு ரூபாய் நோட்டு மட்டுமே ஆகும். கருமைவீரர் காமராஜரின் ஆட்சி ஒரு சிறப்பான ஆட்சியாகும். உலகநாடுகள் திரும்பிபர்க்கும் விதமாக ஆட்சியமைத்த பெறுமைக்குரிய கல்வித்தந்தை காமாராஜர் ஆவார்.

## References

*A Review of the Madras Legislative Assembly (1952–1957)*Archived 17 October 2013 at the Wayback Machine.

Balasubramanian, T., Venkatraman, V. (2021). "V.O.Chidambaram Pillai:The Vision and Mission of Swadeshi Nationalist of Tamilnadu", *Kala:The Journal of IndianArtHistoryCongress*.(Vol.27, No. 1 (XII): PP 33-41).

Bhatnagar, R., K. (13 October 2009). *Tributes To Kamaraj*. Asian Tribune. Archived from the original on 21 February 2014. Retrieved 3 February 2014.

Chandra, Bipan. (2008). *India Science Independence.* Penguin UK.

Chhibber, Manesh. (2018). K.kamaraj *The Southern Stalwart Who Gave India* twopms The print .Retrieved 11 march 2021.

*Crusading Congressman, Frontline Magazine Archived* . (15 September 2008). he Way back Machine, hinduonnet.com. (15–28 September 2001).

Devanesan. (2003). *A History of Tamil Nadu Upro -1995.* A.D.Marthanda.

George Joseph. (2016). *A True Champion of Subaltern.* Archived 26 January 2016 at the wayback Machine.

Gopal, Madan. (1990). *India through the ages*. K.S. Gautam (ed.) Publication Division, Ministry of Information and Broadcasting, Government of India.

He raised the bar with simplicity. *The Hindu*. (16 July 2008). Archivedat the Wayback Machine.

Kamaraj 116th birth Anniv: Rare pics of 'Kingmaker'". Deccan Herald. (15 July 2019). Retrieved 22 May 2020.

Kandaswamy, P. (2001). *The Political Career of K. Kamaraj*. Concept Publishing Company.

Kandaswamy, P. (2001). *The Political Career of K. Kamaraj.* Concept Publishing Company. pp. 62–64. Archived from the original on 31 July 2017.

Kapur., Raghu Pati. (1966). *Kamaraj, The Iron Man*. Archived from the original on 16 November 2014.

Khan, Farhat Basir. (2019). The Game of Votes: Visual Media Politics and Elections in the Digital Era. SAGE Publishing.

Kumaraswami Kamaraj. (2020). Dead; Power Broker in Indian Politics". *The New York Times*.

*Padma Awards Directory1954–2007.*(2009). Ministry of Home Affairs. Archived fromtheoriginalon. Retrieved 7 December 2010.

Pillai K.K. (1979). *Studies in the History of India with special Reference to Tamilnadu*, *Madras*. MJP Publisher.

Pioneer, The. “To regain lost glory, Congress needs a Kamaraj as its leader”. *The Pioneer* Times, Kasturi Rangan Special to The New York (3 October 1975).

*Revised edition of book on Kamaraj to be launched Archived*. (10 May 2011). the Wayback Machine. (8 July 2009). *The Hindu*.

Stepan, Alfred; Linz, Juan J.; Yadav, Yogendra. (2011). *Crafting State-Nations: India and Other Multinational Democracies.* JHU Press.

Thangavelu, K. (2008). *Tamilaga Varalaru Varisai -12 Tamilaga Samuga Panpattu Varalaru-2 Tamil*. Amizhtham Pathipakam,Chennai.

*The commonsense politician, Frontline Magazine*. 17–30 August 2002 Archived (28 July 2011), at the Wayback Machine.

*The Madras Legislative Assembly, Third Assembly I Session*. Archived 14 May 2011 at the Wayback Machine.

*The Madras Legislative Assembly, Third Assembly II Session.* Archived 14 May 2011 at the Wayback Machine.

Venkatesan, P. and Sivakumar, N. (2012). “Freedom Movement in Madras Presidency with Special Reference to The Role of Kamaraj (1920–1945)”. *Indian Streams Research Journal*. (Vol.2 (7):1).

Virudhunagar. (2014). *K.Kamaraj*. Wayback Machine.